## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## பத்திரிக்கைக் குறிப்பு

தமிழ்நாடு வோளண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் 14 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 28 இணைப்புக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பத்து (10) இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு 2020-21ஆம் வருடத்திற்கான மாணவர் சேர்க்கை நடை பெற்று வருகிறது. 45,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இதுவரை பெறப்பட்டுள்ளன.

கோவிட் வைரஸ் பரவல் மற்றும் பாதிப்பு அதிகமுள்ள காரணத்தினால், இணையதளம் மூலமாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டு வருகிறது.

ஆகையினால், பத்து (10) இளங்கலை பட்டப்படிப்புகளுக்கும் விண்ணப்பிக்க வசதியாக, இணையதளம் மூலமாக விண்ணப்பத்தை பதிவேற்றுவதற்கான கடைசி தேதி 05.10.2020 வரை நீட்டிக்கப்படுள்ளது என்று முனைவர் மா.கல்யாணசுந்தரம், முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை) தெரிவித்தார்கள்.

தேதி நீட்டிப்பு குறித்த முழு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| வ. எண் | அட்டவணை | இருக்கும் தேதி | நீட்டிக்கப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1. | இணையதளம் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 17.09.2020 | 05.10.2020 |
| 2. | தரவரிசை பட்டியல் வெளியீடு | 29.09.2020 | 15.10.2020 |